உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கை – 01/2023

எனது இலக்கம் : HA /02/26/05/03
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு,
"நில மெதுர"
எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05.
2023.01.10

சகல மாகாண பிரதம செயலாளர்கள்,
சகல மாவட்ட செயலாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,

## வளங்கள் விபரத் திரட்டினை டிஜிட்டல்மயமாக்கல்

பிரதேசத்தில் காணப்படும் வளங்களை உரிய வகையில் இனங்கண்டு அவற்றினை முகாமைத்துவம் செய்வதற்கு வசதியாக மாகாண சபை மட்டத்திலும், மாவட்ட செயலக மட்டத்திலும், பிரதேச செயலக மட்டத்திலும் "வள விபரங்கள்" அறிக்கை ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதில் ஈடுபாடு காட்டியுள்ள உத்தியோகத்தர்களின் அர்ப்பணம் மற்றும் ஊக்கத்தின் அடிப்படையில் இணையவழி ஊடாக தகவல்களைப் பெற முடியுமான வகையில் பல்வேறு மட்டத்தில் தகவல் முகாமைத்துவ அமைப்பினைப் பேணிச் சென்றாலும், பயனர்களின் வசதிக்காக அறிவியல் அடிப்படையில் தரவுகளின் வகையீடு, தேவைப்படும் நபர்களுக்கு மாத்திரம் அத்தரவுகளைப் பயன்படுத்துவதற்கான இயலுமை உள்ள வகையில் கூட்டிணைந்த தகவல் அமைப்பை பேணிச் செல்வது கட்டாயம் என இனங்காணப்பட்டுள்ளது.

2. உள்நாட்டலுவல்கள் விடயப் பொறுப்பு அமைச்சினால் கடந்த காலங்களில் தொகுக்கப்பட்ட "வள விபரத் திரட்டு" இனை இணையவழி தரவு அமைப்பினுள் இற்றைப்படுத்துவதற்கும், அதனை டிஜிட்டல் தளத்திற்கு விடுவிப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்காக www.resourceprofile.gov.lk என்ற இணைத்தளத்தின் ஊடாக இந்த டிஜிட்டல் தரவுத் தளத்தினை அணுக முடியும்.

3. இதன் போது அமைச்சு, மாகாண சபை, மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்களில் கீழ் மட்டத்திலிருந்தே "வள விபரத்திரட்டு" ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் தயாரிப்பதற்கும், அவற்றிற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளம் காண்பதும் அவசியமாகும். முறைசார்ந்த இந்த பணியை செயற்படுத்தும் போது பின்வரும் அறிவுறுத்தல்கள் மற்றும் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

3.1 நிர்ணயிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தராக பிரதேச செயலகத்தின் பிரதி / உதவிப் பணிப்பாளரிடம் ( திட்டமிடல்) பொறுப்பினை ஒப்படைத்தல்.

3.2 இதன் நிரந்த உதவி உத்தியோகத்தர்களாக இந்தச் செயற்பாடு தொடர்பான சிறந்த அறிவும், கையாள்கையும் கொண்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்தல் மற்றும் அதற்காக புள்ளிவிபர உத்தியோகத்தர்களின் உதவியையும் அவர்களுக்கு வழங்குதல்.

3.3 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அனைத்து கள உத்தியோகத்தர்களும் தமது விடயப் பரப்பின் கீழ் முகாமைத்துவம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் தகவல்கள், தேசிய வள விபரத் திரட்டு, தரவுத் தளத்தினுள் உள்ளீடு செய்ய முடியுமான வகையில் தகவல்களை வழங்குதல்.

3.4 அதற்காக அந்த உத்தியோகத்தர்களுக்கு தமது விடயப் பரப்பிற்கு ஏற்றாற் போல இணையவழி ஊடாக அத்தரவுகளை அணுகுவதற்கு முடியுமான வகையில் உள்ளீடு செய்யப்படும். அந்த உத்தியோகத்தர்களின் தரவுகளை அணுகுவதற்கான உள்ளீட்டைத் தாயரித்தல் மற்றும் நிர்வாகம் தற்சமயம் தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தர் அல்லது நிறுவனத் தலைவரினால் பெயர்க் குறிப்பிடப்படும் பொருத்தமான உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.5 தரவுகளின் தன்மைக்கு ஏற்ப குறித்த தரவுகளை இற்றைப்படுத்துவதற்கான கால எல்லையை இனங்காணல்.(வாராந்தம், மாதாந்தம், மூன்று மாதங்கள் மற்றும் வருடாந்தம் என்றவாறு)

3.6 எதிர்வரும் காலங்களில் தரவு வகையீட்டுக்கு ஏற்ப அவ்வந்த பிரிவுகளின் தரவுகளுக்கான பொறுப்பினை ஏற்கும் நிறுவனத் தலைவர் அடையாளம் காணப்படுதல் வேண்டும்.
)உதா: பாடசாலையுடன் தொடர்புடைய தரவுகள்: வலயக் கல்விப் பணிப்பாளர், சுகாதார தரவு : பிராந்திய சுகாதார சேவை உத்தியோகத்தர்)

3.7 மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முனைப்பான பங்களிப்புக்கு இந்த செயற்பாடு அவசியமாகின்றன.

## 4. தரவுப் பயனர் அணுகல்

4.2023 1 ஜனவரி மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் தரவுத் தளம் தொடர்பாக அவசியப்படும் பயிற்றுவிப்பு மற்றும் விழிப்பூட்டல் மேற்கொள்ளப்படும் என்பதோடு, தளத்தினுள் தரவுகளை உள்ளீடு செய்வதற்கு ஆரம்பிக்க வேண்டும்.

4.2 சகல அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் பிற அரச நிறுவனங்களுக்கான தரவுகளைப் பயன்படுத்துவதற்காக தரவு அணுகல் (System Access Accounts) இனை தயாரித்துக் கொள்ள முடியும். இதன் கீழ் பதிவு செய்யப்படும் சகல பயனர்களுக்கும் தேசிய மட்டத்தில், மாகாண மட்டத்தில், மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் தரவுகள் மற்றும் தகவல்களை அணுகுவதற்கான அவகாசம் வழங்கப்படுகின்றது.

4.3 திரட்டப்பட்ட தரவுகளுக்கான அணுகுமுறையை வழங்கும் போது அது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அந்த உரிமையை வழங்கவும் தனிப்பட்ட

தரவுகளை பாதுகாப்புச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் தரவுகளை பரிமாறிக் கொள்ளவும் நடவடிக்கை எடுப்பதன் பால் கவனம் செலுத்தல் வேண்டும்.

5. இதன்போது, தற்போதுள்ள 'ஈ-கிராம உத்தியோகத்தர்' திட்டம் மற்றும் அரசாங்கத்தின் பிற உத்தியோகபூர்வ தரவு சேகரிப்பு திட்டங்களால் உள்ளடக்கப்பட்ட மாவட்டங்கள் / பிரதேச செயலகப் பிரிவுகளாயின், அந்த தரவு தளத்துடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் மிகவும் பயனுள்ள தரவு அமைப்பினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

6. இந்த இணையவழி " தேசிய வள விவரக்குறிப்பு" ஜனாதிபதி செயலகத்தின் சமூக விவகாரப் பிரிவு மற்றும் நிதி பொருளாதார ஸ்தீரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய மட்டத்தில் இப்பணியை ஒருங்கிணைத்தல் மற்றும் எளிதாக்கும் வேலைத்திட்டத்தினை உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முலம் அமுல்நடாத்தப்படுவதுடன், மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களினால் செயற்படுத்துவதற்கான பொறுப்பு ஏற்கப்படும்.

**ஒப்பம் / நீல் பண்டார ஹபுகின்ன**

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**பிரதிகள்:**

1. சகல மாகாண கௌரவ ஆளுநர்கள்
2. ஜனாதிபதிச் செயலாளர்
3. பிரதமர் செயலாளர்
4. அமைச்சரவைச் செயலாளர்
5. சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
6. சகல திணைக்களத் தலைவர்கள்
7. சகல நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள்
8. கணக்காய்வாளர் தலைமை அதிபதி